# தி இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்

CIN : L26942TN1946PLC000931

பதிவு அலுவலகம் : "தன் பில்டிங்", 827, அண்ணா சாலை, சென்னை - 600 002.

கார்பரேட் அலுவலகம்: "கோரமண்டல் டவர்ஸ்", 93, சாந்தோம் நெடுஞ்சாலை, கற்பகம் அவென்யூ, ஆர்.ஏ.புரம், சென்னை - 600 028.

இணையதளம் : www.indiacements.co.in; மின்னஞ்சல் : investor@indiacements.co.in

தொலைபேசி : 044-2852 1526 / 28572 100 / 400 தொலைநகல் : 044-2851 7198

## பங்குதாரர்களுக்கான அறிவிப்பு

கம்பெனியில் தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்த பங்குதாரர்களுக்கு மின்னஞ்சல் மூலமும் மற்ற பங்குதாரர்களுக்கு பதிவு தபால் மூலமும் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ள விளக்க அறிக்கை, 2015 வருடாந்திர அறிக்கை, பதிலி படிவங்கள் மற்றும் வருகை குறிப்பேடு ஆகியவற்றுடன் அனுப்பப்பட்டுள்ள நவம்பர் 2, 2015 தேதியிட்ட அறிவிப்பில் உள்ளடங்கிய சாதாரண மற்றும் சிறப்பு அலுவல்களை விவாதிக்க "தி இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெடின்" 69வது வருடாந்திர பொதுக்கூட்டம் 2015 டிசம்பர் மாதம் 7-ம் தேதி, திங்கட்கிழமை, காலை 9.30 மணிக்கு, சத்குரு ஞானாநந்தா ஹால் [நாரதகான சபா] எண் 314, டி.டி.கே. சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018ல் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. மேலும் வருடாந்திர பொதுக்கூட்டம் பற்றிய அறிவிப்பு மற்றும் 2015 வருடாந்திர அறிக்கை ஆகியவை அனைத்து பங்குதாரர்களுக்கும் மின்னஞ்சல் மற்றும் பதிவு அஞ்சல் மூலம் 13.11.2015 அன்று அனுப்பி முடிக்கப்பட்டுள்ளது.

பங்குதாரர்கள் மேற்கண்ட ஆவணங்களை www.indiacements.co.in என்ற கம்பெனியின் இணையத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பங்குதாரர் மேற்கண்ட ஆவணங்களை காகித வடிவில் பெற விரும்பினால், மின்னணு வடிவில் பங்குகள் வைத்திருக்கும் பங்குதாரர்கள் தங்கள் DP Id மற்றும் வாடிக்கையாளர் Id ஆகியவற்றை குறிப்பிட்டும் மற்றும் பத்திர வடிவில் பங்குகள் வைத்திருக்கும் பங்குதாரர்கள் தங்கள் ஃபோலியோ எண்ணை குறிப்பிட்டும் investor@indiacements.co.in என்ற மின்னஞ்சலில் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

லிஸ்டிங் ஒப்பந்தங்கள் பிரிவு 35B, கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 108 மற்றும் கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014 திருத்தப்பட்ட விதி 20ன்படி கம்பெனி அங்கத்தினர்களுக்கு 69வது வருடாந்திர பொதுக்கூட்டத்தின் தீர்மானங்கள் மீது தங்கள் வாக்குகளை மின்னணு மூலம் வாக்களிக்க நேஷனல் செக்யூரிடீஸ் டெபாசிடரி லிமிடெட் (NSDL) மூலம் வசதியளிக்கப்பட்டுள்ளது. அங்கத்தினர்களின் வாக்குரிமை கடைசி நாளான 01.12.2015 (cut-off நாள்) அன்று அவர்கள் வசமிருக்கும் சமபங்குகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது. தொலை மின்னணு வாக்குப்பதிவு 03.12.2015 காலை 09.00 மணி முதல் துவங்கி 06.12.2015 மாலை 06.00 மணிக்கு நிறைவுபெறும். இந்த காலத்தில் பத்திர வடிவிலும் மற்றும் மின்னணு வடிவிலும் கடைசி நாள் அதாவது 01.12.2015 (cut-off நாள்) அன்று பங்குகள் வைத்திருக்கும் பங்குதாரர்கள் தங்கள் வாக்குகளை மின்னணு முறையில் பதிவு செய்யலாம். இந்த காலத்திற்குப் பிறகு NSDL ஆல் தொலை மின்னணு வாக்குப்பதிவு நிறுத்தப்படும். தீர்மானத்தின் மீது பங்குதாரர் ஒரு முறை வாக்களித்து விட்டால் பிறகு அதை மாற்றிக் கொள்ள அனுமதியில்லை.

மின்னணு வாக்குப்பதிவு பற்றிய தகவல் மற்றும் சந்தேகங்கள் ஏதேனும் இருந்தால், உறுப்பினர்கள் விளக்கங்களுக்கு அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள அறிவிப்பின் குறிப்பில் 13வது பத்தியை படிக்கவும் அல்லது திரு.கே.பாலசுப்பிரமணியன், துணை பொது மேலாளர், இண்டகிரேட்ட் எண்டர்பிரைசஸ் (இந்தியா) லிமிடெட் (RTA), தொலைபேசி எண் : (044) 28140801-03, மின்னஞ்சல் : kalyan@integratedindia.in, அல்லது NSDL தொலைபேசி எண் : (022) 2499 4738 / 4360 / 4262, மின்னஞ்சல் : evoting@nsdl.co.in அல்லது திரு.ஜி.பாலகிருஷ்ணன், சீனியர் பிரசிடெண்ட் மற்றும் கம்பெனி செயலாளர், தொலைபேசி எண் : (044) 2852 1229, மின்னஞ்சல் : bala@indiacements.co.in மற்றும் திரு.எஸ்.ஸ்ரீதரன், வைஸ் பிரசிடெண்ட் (செக்ரட்டேரியல்), தொலைபேசி எண் : (044) 2857 2148, மின்னஞ்சல் : ssridharan@indiacements.co.in ஆகியோர்களை தொடர்பு கொள்ளலாம்.

எந்த ஒரு நபரும் ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டபின் ஆனால் cut-off நாளான 01.12.2015 தேதிக்கு முன் கம்பெனியின் பங்குகளை வாங்கி அங்கத்தினரானால், evoting@nsdl.co.in அல்லது கம்பெனி / (RTA)க்கு விண்ணப்பம் செய்து புகு பதிகை (Login ID) மற்றும் கடவுச் சொல் (Password) ஆகியவற்றை கேட்டுப் பெறலாம். மின்னணு மூலம் வாக்களிப்பதற்கு நீங்கள் ஏற்கனவே NSDL-ல் பதிவு செய்திருந்தால் நீங்கள் தற்போதைய புகு பதிகை (Login ID) மற்றும் கடவுச் சொல் (Password) ஆகியவற்றை பயன்படுத்தி வாக்களிக்கலாம். நீங்கள் உங்கள் கடவுச் சொல்லை மறந்து விட்டால் www.evoting.nsdl.com என்ற இணையதளத்தில் உள்ள கடவுச் சொல்லை "மறந்து விட்டால் திரும்பப் பெறும் வசதி" (Forgot User Details/Password) மூலம் பெறலாம் அல்லது 1800-222-990 என்ற இலவச தொலைபேசி எண்ணை அணுகி பெறலாம்.

தொலை மின்னணு முறை மூலம் வாக்களிக்க இயலாத அங்கத்தினர்கள் தங்கள் வாக்குகளை ஆண்டு பொதுக்கூட்டத்தில் வாக்குப்படிவம் மூலம் வாக்களிக்கலாம்.

தொலை மின்னணு முறை மூலம் ஏற்கனவே வாக்களித்த அங்கத்தினர்கள் ஆண்டு பொதுக்கூட்டத்தில் பங்கு பெறலாம் ஆனால் அவர்கள் வாக்களிக்க முடியாது.

டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் பயனாளிகளின் பட்டியல் அல்லது உறுப்பினர் பதிவேடு ஆகியவற்றில் cut-off நாளன்று இடம் பெற்றிருக்கும் நபர் மட்டுமே தொலை மின்னணு முறையில் அல்லது வாக்குப்படிவம் மூலம் ஆண்டு பொதுக்கூட்டத்தில் வாக்களிக்கும் உரிமை பெற்றவராவர்.

திருமதி. பி.ஆர்.சுதா, பிராக்டிசிங் கம்பெனி செயலாளர் (உறுப்பினர் எண் F6046), அவர்கள் வாக்குப்பதிவு நேர்மையாகவும், ஒளிவுமறைவற்ற தன்மையிலும் நடைபெற ஆராய்வாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வாக்குப்பதிவு முடிவுகள் கம்பெனியின் வருடாந்திர பொதுக்கூட்டத்திலோ அல்லது அதற்குப் பிறகோ அறிவிக்கப்படும் மற்றும் முடிவுகள் ஆராய்வாளரின் அறிக்கையுடன் கம்பெனியின் இணையதளம் : www.indiacements.co.in மற்றும் NSDL-ன் இணையதளத்திலும் 09.12.2015 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ வெளியிடப்படும் மற்றும் கம்பெனியின் சமபங்குகள் லிஸ்டிங் செய்யப்பட்டுள்ள ஸ்டாக் எக்சேஞ்சுகளுக்கும் தகவல் தெரிவிக்கப்படும்.

2013ம் வருட கம்பெனிகள் சட்டம் பகுதி 91 மற்றும் லிஸ்டிங் ஒப்பந்தங்கள் பிரிவு 16-ன்படியும் மேற்கண்ட வருடாந்திர பொதுக்கூட்டத்திற்காக கம்பெனியின் உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு மாற்று புத்தகங்கள் 01.12.2015 முதல் 07.12.2015 வரை (2 நாட்களும் உட்பட) மூடப்பட்டிருக்கும்.

குறிப்பு: கூட்டத்தில் கலந்து கொண்டு வாக்களிக்க உரிமைப்பெற்ற அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் தமக்கு பதிலாக கூட்டத்தில் கலந்து கொண்டு வாக்களிக்க பதிலியை நியமிக்க உரிமை உண்டு. மற்றும், மேற்படி பதிலி கம்பெனியின் அங்கத்தினராக இருக்க வேண்டியதில்லை. எனினும் கூட்டம் தொடங்குவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்பாக கம்பெனியின் பதிவு அலுவலகத்தில் பதிலி பாரங்கள் டெபாசிட் செய்யப்பட வேண்டும்.

தி இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்டிற்காக
ஜி. பாலகிருஷ்ணன்
சீனியர் பிரசிடெண்ட் மற்றும் கம்பெனி செயலாளர்

இடம் : சென்னை
தேதி : 13.11.2015